RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-109 | 26 ஏப்ரல் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## காஷ்மீர் தாக்குதலை பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கு பயன்படுத்தும் பாஜக: திருமாவளவன் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.26

காஷ்மீர் தாக்குதல் சம்பவத்தை பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கு பயன்படுத்துவதாக பாஜக மீது விசிக தலைவர் திருமாவளவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: விசிக சார்பில் தமிழகம் மற்றும் இந்திய அளவில் பல்வேறு தளங்களில் சாதனைகள் படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறோம். முன்னாள் முதல்வர் கருணாநிதி, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், கர்நாடக முதல்வர் சித்தராமையா உள்ளிட்ட பலருக்கு விசிக விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, அம்பேத்கர் சுடர் விருதுக்கு திராவிடர் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.எஸ்.சலன், பெரியார் ஒளி விருதுக்கு நடிகர் சத்யராஜ், காமராஜர் கதிர் விருதுக்கு புதுச்சேரி முன்னாள் முதல்வர் வைத்தியலிங்கம், மார்க்ஸ் மாமணி விருதுக்கு தமிழ் தேசிய விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தியாகு, காயிதே மில்லத் பிறை விருதுக்கு தமிழ்நாடு ஜமாத் உலமா சபைத் தலைவர் காஜாமொய்தீன் பாகவி, செம்மொழி ஞாயிறு விருதுக்கு இலங்கை தமிழறிஞர் பேராசிரியர் சண்முகராஜ், அயோத்திதாசர் ஆதவன் விருதுக்கு பவுத்த ஆய்வறிஞர் முனைவர்



ஜம்புலிங்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விருது வழங்கும் விழா சென்னையில் நடைபெறும். விழா நாள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்து கூறியதாவது: காஷ்மீரில் நடந்துள்ள பயங்கரவாத தாக்குதலுக்கு பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும். இது அரசியல் நோக்கத்தில் அல்லாமல் நாட்டின் பாதுகாப்பை முன்னிறுத்தி வைக்கக் கூடிய கருத்து.

அரசமைப்புச் சட்டம் 370ஐ நீக்கினால் கூட பயங்கரவாதம் தொடரும் என்பதைத் தான் கொடூர நிகழ்வு உணர்த்துகிறது. சவூதி அரேபியா பயணத்தை முடித்து நாடு திரும்பிய பிரதமர், சம்பவ இடத்துக்கு செல்வார் என எதிர்பார்த்தால் பிஹார் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவது அதிர்ச்சியளிக்கிறது. இந்த தாக்குதலை பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கு பயன்படுத்துகிறார்கள் என்பதே கசப்பான உண்மை.

சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போர் என்ற பேரில் நடத்தப்படும் தாக்குதலில் பழங்குடியினரே படுகொலை செய்யப்படுகிறார்கள். அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. இதை நிறுத்திவிட்டு மாவோயிஸ்ட் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அங்குள்ள வளங்களை ஆக்கிரமிக்கவே தாக்குதல் நடத்தப்படுவதாக மாவோயிஸ்ட் அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன.

இப்படி இந்தியாவில் நிலவும் அமைதியின்மைக்கு மத்திய அரசுக்கு பொறுப்பேற்க வேண்டும். இதுபோன்ற சம்பவத்தின்போது இந்தியராய் ஒன்றிணைவோம் என பேசும் பாஜகவினர், சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு அரசியலை விதைக்கின்றனர்.

கட்சிக் கொடி கம்பங்களை அகற்றும் தீர்ப்பை எதிர்த்து விசிக மேல்முறையீடு செய்யவிருக்கிறது. தமிழக அரசும் வழக்குத் தொடர வேண்டும்.

துணைவேந்தர் மாநாட்டின் மூலம் பதற்றத்தை ஏற்படுத்துவதோடு, துணைவேந்தர்களுக்கு தேவையற்ற நெருக்கடியை ஆளுநர் உருவாக்குகிறார். துணை குடியரசுத் தலைவர் மாநாட்டில் பங்கேற்பதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திருவாலங்காடு அருகே ரயிலை கவிழ்க்க சதியா? ரயில்வே போலீஸார் விசாரணை

திருவள்ளூர், ஏப்.26

திருவாலங்காடு ரயில் நிலையம் அருகே தண்டவாள பகுதியில் போல்ட் நட்டுகள் அகற்றப்பட்டிருந்ததால், ரயிலை கவிழ்க்க சதியா? என, ரயில்வே போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை அரக்கோணம் ரயில்வே மார்க்கத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ரயில் நிலையம் உள்ளது. இந்த ரயில் நிலையம் அருகே அரக்கோணத்தில் இருந்து சென்னைக்கு விரைவு ரயில்கள் செல்லும் தண்டவாள பகுதியில் இன்று காலை திடீரென சிக்னல் கட்டாகி இருந்தது ரயில்வே ஊழியர்களுக்கு தெரிய வந்தது.

இதையடுத்து, சிக்னல் அருகே உள்ள தண்டவாள பகுதியில் ரயில்வே ஊழியர்கள் ஆய்வு செய்த போது, தண்டவாளத்தின் இணைப்பு பகுதியில் உள்ள 'எம்'பின் போல்ட் நட்டுகள் அகற்றப்பட்டிருந்தது தெரிய வந்தது. அந்த வழித்தடத்தில்



அப்போது எவ்வித ரயில்களும் இயக்கப்படாததால் நல்வாய்ப்பாக அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

தொடர்ந்து, அரக்கோணம் சென்னை மார்க்கத்தில் வரும் விரைவு ரயில்கள், மின் ரயில்கள் செல்லும் தண்டவாளத்தில் இயக்கப்பட்டு வருகிறது. தகவல் அறிந்து சம்பவ இடம் விரைந்த ரயில்வே உயரதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அரக்கோணம் ரயில்வே போலீஸார், மோப்ப நாய் ஜான்சி சகிதம், ரயிலை கவிழ்க்க சதியா? என்பது குறித்து, ஆய்வு மற்றும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், அகற்றப்பட்ட 'எம்'பின் போல்ட் நட்டுகளை பொருத்தி, தண்டவாளத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பணியில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு கவரப்பேட்டை ரயில் நிலையத்தில் போல்ட் நட்டுகள் கழற்றப்பட்டதால் ரயில் தடம்புரண்டு விபத்து ஏற்பட்ட நிலையில், திருவாலங்காடு ரயில் நிலையம் அருகே நடந்த இந்த சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய 2 லஷ்கர் பயங்கரவாதிகளின் வீடுகள் குண்டுவீசி அழிப்பு

புதுடெல்லி, ஏப்.26

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய 2 லஷ்கர் பயங்கரவாதிகளின் வீடுகளை பாதுகாப்புப் படையினர் குண்டுவீசி அழித்தனர். அந்த வீடுகளுக்குள் வெடி பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாக வட்டாரங்கள் தெரிவித்தன.



காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் கடந்த 22ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் இதொய்பா ஆதரவு அமைப்பான டிஆர்எப் பொறுப்பேற்றது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர் இதொய்பா பயங்கரவாதிகளான அடில் உசேன் தோக்கர் மற்றும் ஆசிப் ஷேக் ஆகிய இருவரின் வீடுகள் ஜம்மு காஷ்மீரில் நடந்த தனித்தனி குண்டுவெடிப்புகளில் அழிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களின் வீடுகளுக்குள் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

அடில் உசேன் தோக்கர் அனந்த்நாக் மாவட்டத்தையும், ஆசிப் ஷேக் புல்வாமாவையும் சேர்ந்தவர்கள். ஹாஷிம் மூசா என்கிற சுலேமான் மற்றும் அலி பாய் என்கிற தல்ஹா பாய் ஆகியோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குறித்து துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ.20 லட்சம் பரிசு வழங்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

## ஊட்டியில் ஆளுநர் கூட்டிய மாநாடு மாநில பல்கலை. துணை வேந்தர்கள் புறக்கணிப்பு

ஊட்டி, ஏப்.26

ஊட்டி ராஜ்பவன் மாளிகையில் இன்று காலை துணைவேந்தர்கள் மாநாடு தொடங்கியது. இதில் பெரும்பாலான அரசு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நீலகிரி மாவட்டம், ஊட்டியில் உள்ள ராஜ்பவன் மாளிகையில், தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் கலந்துக் கொள்ளும் மாநாடு, தமிழ்நாடு ஆளுநர் ஆன்.என்.ரவி தலைமையில் நடந்து வந்தது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனம் செய்யும் அதிகாரமும் இனி



தமிழக அரசுக்கே உள்ளது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் ஆளுநரின் அதிகாரம் பறிக்கப்பட்டது. எனினும், அதனையும் மீறி இம்முறை துணை வேந்தர்கள் மாநாடு ஊட்டியில் இன்றும், நாளையும் நடக்கிறது. இதனால் இந்த மாநாட்டில் துணைவேந்தர்கள் அனைவரும் கலந்து கொள்வார்களா என்ற சர்ச்சை நீடித்து வந்தது.

இந்நிலையில் இன்று மாநாடு தொடங்கியது. மாநாட்டை குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை வகித்தார். இந்த மாநாட்டுக்கு 49 பல்கலைக்கழக துணை வேந்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதில் பல்வேறு தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துணை வேந்தர்கள் 32 பேர் கலந்து கொண்டனர்.

அதே சமயம் அரசு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துணைவேந்தர்கள் பெரும்பாலானவர்கள் கலந்து கொள்ளவில்லை. பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் மட்டும் பங்கேற்றார். பெரும்பாலான பல்கலைக்கழகங்களின் இயக்குநர்கள், டீன் மற்றும் பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர்.

குடியரசு துணைத் தலைவர் மற்றும் ஆளுநர் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டை முன்னிட்டு ராஜபவன் மாளிகை மற்றும் தாவரவியல் பூங்கா செல்லும் சாலை, ஊட்டி தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளம் ஆகிய பகுதிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## இந்தியா, பாகிஸ்தான் அரசுகள் அதிகபட்ச நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும்: ஐ.நா

ஐநா, ஏப்.26

இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐநா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் சார்பில் பேசிய ஸ்டீபன் டுஜாரிக், "அவர் (ஐ.நா. பொதுச்செயலாளர்) எந்த நேரடித் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர் நிலைமையை மிக நெருக்கமாகவும் மிகுந்த அக்கறையுடனும் கண்காணித்து வருகிறார் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, 22 ஆம் தேதி ஜம்மு காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு நாங்கள் மிகவும் தெளிவாகக் கண்டனம் தெரிவித்தோம். இதில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

எனினும், அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்கவும்,



நிலைமை மேலும் மோசமடையாமல் பார்த்துக் கொள்ளவும் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான எந்தவொரு பிரச்சினையும், அர்த்தமுள்ள, பரஸ்பர ஈடுபாட்டின் மூலம் அமைதியாக தீர்க்க முடியும் என்றும், தீர்க்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் நம்புகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் கடந்த 22ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் இதொய்பா ஆதரவு அமைப்பான டிஆர்எப் பொறுப்பேற்றது. தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் 2 பேர் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து இந்தியா பாகிஸ்தான் இரு தரப்பிலும் பரஸ்பரம் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பாகிஸ்தானுக்கு சிந்து நதி நீரை வழங்கும் ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுவதாக இந்தியா அறிவித்துள்ளது. பதிலுக்கு, பாகிஸ்தான் வான் பரப்பில் இந்திய விமானங்கள் பறக்க தடை உள்ளிட்ட தடைகளை பாகிஸ்தானும் அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாதுகாப்பு நிலைமையை ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி இன்று ஆய்வு செய்ய உள்ளார். இதற்காக அவர் ஸ்ரீநகர் மற்றும் உதம்பூருக்குச் செல்வார் என்றும், காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிறுத்தப்பட்டுள்ள மூத்த ராணுவத் தளபதிகள் மற்றும் பிற பாதுகாப்பு நிறுவனங்களின் அதிகாரிகளை அவர் சந்திக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி சந்தைகள் அடைப்பு: 26 உயிர்களைப் பலிகொண்ட பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வணிகர்கள் முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதால் டெல்லியின் சாந்தினி சவுக்கில் உள்ள சந்தைகள் மூடப்பட்டுள்ளன.

## அரசு மருத்துவமனையில் மாணவிக்கு ரோபோடிக் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பாராட்டு

சென்னை, ஏப்.26

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், அரசுப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் 16 வயது மாணவி அஸ்விணிக்கு ரோபோடிக் மூலம் அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து சிகிச்சை அளித்த மருத்துவக்குழுவினரை பாராட்டினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை இந்தியாவிலேயே பல்வேறு சாதனைகளை மருத்துவத்துறையில் செய்து வருகிறது.

ஏற்கெனவே குஜராத்தில் இருந்து 120 மருத்துவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்து தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கட்டமைப்புகளை வியந்து பாராட்டி சென்றார்கள். கடந்த ஆண்டு மேகாலாயா மாநிலத்திலிருந்து மகப்பேறு மருத்துவத்திற்கு பயிற்சி பெறுவதற்கு 30க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இங்கேயே தங்கியிருந்து பயிற்சி பெற்று சென்றார்கள் இப்படி இந்தியாவில் பல்வேறு



மாநிலங்களிலிருந்தும் கூட தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறையின் மருத்துவச் சேவைக்கு வருகை புரிந்து பயிற்சி பெறுவதற்கான தேவைகள் இருந்துக் கொண்டிருக்கிறது.

முதல்வர் 2022 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி ஓமந்தூரார் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் Robotic cancer equipment மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். ரூ.34.50 கோடி மதிப்பிலான அந்த இயந்திரம் இந்தியாவில் உள்ள வேறு எந்த மாநிலத்திலும் மாநில அரசு மருத்துவமனையிலும் இல்லாத ஒன்று. எய்ம்ஸ், ஜிப்மர் போன்ற ஒன்றிய அரசு மருத்துவமனைகளில் மட்டுமே அக்கருவி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த சேவை தொடங்கப்பட்ட நாள்முதல் தற்போது வரை இருதயம், புற்றுநோய், தைராய்டு, வயிறு மற்றும் குடல் அறுவை சிகிச்சைகள் என்று 362 சிகிச்சைகளை தொடர்ந்து செய்து சாதனைப் படைத்து வருகிறது. ஒவ்வொரு சிகிச்சைக்கும் தனியார் மருத்துவமனையில் ரூ.8 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை செலவாகும்.

இன்றைக்கு அந்த மருத்துவச் செலவு முதலமைச்சரின் மருத்துவக்காப்பீட்டு திட்டத்தில் 362 அறுவை சிகிச்சைகளும் வெற்றிகரமாக நடைபெற்று அறுவை சிகிச்சைகள் செய்து கொண்டவர்கள் அனைவருமே மிகவும் சிறப்பாக நலமுடன் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனையில் மருத்துவர்கள் இந்திய அளவில் புகழ்மிக்க சாதனைகளை செய்து இருக்கிறார்கள்.

கடந்த 03.04.2025 அன்று இந்தியாவில் உள்ள அரசு மருத்துவமனைகளில் முதல்முறையாக ரோபோடிக் உதவியுடன் இதய துவார அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னை, மேடவாக்கம் பகுதியைச் சார்ந்த அஸ்வினி என்கின்ற 16 வயது மாணவி தற்போது ஆலந்தூர் பகுதியில் வசித்து கொண்டிருக்கிறார். அவருக்கு இருதயத்தில் இருந்த துவாரத்தை ரோபோட்டிக் உதவியுடன் இன்றைக்கு வெற்றிகரமாக செய்து முடித்து இருக்கிறார்கள். இந்த அறுவை சிகிச்சை செய்து பல மாதங்கள் மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டும்.

அந்த சிகிச்சைக்கு பிறகு பெரிய அளவிலான தழும்பு உடல் மறைகின்ற வகையில் இருக்கும். எனவே அறுவை சிகிச்சை இல்லாமல் மிகச் சிறிய தழும்போடு இந்த ரோபோடிக் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டிருக்கிறது. இந்த சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.18 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை செலவாகும். இந்த சிகிச்சையும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் செய்யப்பட்டிருக்கிறது. ஒன்றிய, மாநில அரசு மருத்துவத்துறை வரலாற்றிலேயே வெற்றிகரமாக செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமே இந்திய வரலாற்றிலேயே ஒரு மிகச் சிறந்த சாதனையை ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை மருத்துவர்கள் செய்திருக்கிறார்கள்.

அந்தவகையில் அன்புத்தங்கை அஸ்வினி என்பவர் இந்த சிகிச்சையின் மூலம் பயன்பெற்று நலமுடன் இருக்கிறார், அவரை சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது,

## சிவியர் உறவின்முறை பாத்தியப்பட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் உற்சவ விழா





தேனி.ஏப் 26

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சண்முகசுந்தரபுரத்தில் அமைந்துள்ள சிவியர் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் சித்திரை உற்சவ திருவிழா மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக சிவியர் வாலிபர் சங்கம் நடத்தும் மகளிர்கான கோலம் போட்டிகள் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து சிறுவர் சிறுமிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன அது சமயம் சிவியர் வாலிபர் சங்கம் சார்பில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 6:00 மணிக்கு மேல் வேட்டவராயன் கோவில் இருந்து அம்மனுக்கு அக்னி சட்டி எடுத்தும் பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர் இரவு 8 மணிக்கு மேல் சிவியர் வாலிபர் சங்கம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இரவு 10 மணிக்கு மேல் முளைப்பாரி ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளில் வருதல் மற்றும் அம்மனுக்கு கரகம் பூஞ்சோலை செலுத்துதல் நிகழ்ச்சி நடைபெற்றது. சிவியர் உறவின்முறை மற்றும் தலைவர் மற்றும் நிர்வாகஸ்தர்கள் வாகன ஓட்டுனர் நல சங்கம் எலக்ட்ரிஷன் நல சங்கம், மாதர் சங்கம் மீனவர் நல சங்கம் பெயிண்டர் நல சங்கம் மற்றும் சிவியர் வாலிபர் முன்னேற்ற சங்கம் அது சமயம் பக்தர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## காரைக்குடிக்கு மண்ணுக்கு பெருமை



சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு மண்ணுக்கு பெருமை சேர்த்திருக்கிறார் வழக்கறிஞர் உமா நந்தினி.

நம் பாரத சேவை வழங்கும் அன்பு தமிழச்சி விருதுகள் 2025 நிகழ்ச்சி சென்னையில் (21.04.2025) அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அன்பு தமிழச்சிக்கான விருதினை காரைக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் உமா நந்தினி வழக்கறிஞருக்கான பிரிவில் அன்பு தமிழச்சி விருதினை பெற்று காரைக்குடி மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் வேளாண்மை இணை இயக்குனர் சுப்புராஜ் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சாந்தி உடன் உள்ளார்.



காஷ்மீர் பல்காம் அண்மையில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 26 பேர் மரணம் அடைந்தனர் அவர்களின் ஆன்மா சாந்தியடைய சிவகங்கை மாவட்ட காமராஜர் மக்கள் கட்சியின் சார்பாக மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி கூட்டம் காரைக்குடியில் இன்று மாலை 6:00 முதல் 6:45 மணி வரை நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் அருளானந்து, தலைமை வகித்தனர் முன்னிலை மாவட்டத் துணைத் தலைவர் பால்ராஜ், மாவட்ட பொருளாளர் சம்பத், மாவட்ட மகளிர் அணி தலைவி ஆனந்தி முத்துக்குமார், காரைக்குடி மாநகரத் தலைவர் அழகர், தென் மண்டல இளைஞரணி துணைச் செயலாளர் அலெக்ஸ், மாவட்ட இளைஞரணி செயலாளர் மணிகண்டன், மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## போடிநாயக்கனூர் திருமலாபுரம் 31 வது பகுதி சொக்கன் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் சித்திரை பொங்கல் விழா





தேனி.ஏப் 26

தேனி மாவட்டம் போடி திருமலாபுரம் 31 வது பகுதி சொக்கன் தோட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் சித்திரை பொங்கல் திருவிழா வெகு விமர்சியாக நடைபெற்றது. இவ்விழாவில் மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக காலை 10 மணிக்கு மேல் சிறுவர் சிறுமியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன அதனை தொடர்ந்து பகல் 1 மணிக்கு மேல் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு மேல் அம்மன் முக்கிய வீதிகளின் நகர்வலமாக வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இரவு 10 மணிக்கு மேல் பெண்கள் முளைப்பாரி எடுத்து நகர்வலமாக ஆற்றில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவின் நிர்வாகக் குழுவினர்கள் தலைவர் ராஜேந்திரன், செயலாளர் செல்லப்பாண்டி, பொருளாளர் ராஜா, துணைத் தலைவர் கருத்த பாண்டி, துணைச் செயலாளர் பாலமுருகன், மற்றும் ரமேஷ், கௌரவத் தலைவர்கள், கௌரவ ஆலோசர்கள் நிர்வாக குழுவினர்கள் நிர்வாகஸ்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் விழா கமிட்டியாளர்கள் மற்றும் 31 வது வார்டு சொக்கன் தோட்டம் பக்தர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அம்மனின் அருளை பெற்றுச் சென்றனர்.

**சாலை விதிகளை கடைப்பிடிப்போம் விபத்தில்லா தமிழகத்தை உருவாக்கவோம்!**

## சென்னை ஆல்பா சிட்டி லயன் சங்கம் மற்றும் அரிமா சங்கத்தை ஒன்றிணைந்து நடத்திய அகவொளி திருமண விழா

தாம்பரம்,ஏப்.26

சென்னை ஆல்பா சிட்டி லயன் சங்கம் மற்றும் அரிமா சங்கத்தை ஒன்றிணைந்து நடத்திய அகவொளி திருமண விழா நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் சென்னை ஆல்பா சிட்டி லயன் சங்கம் மற்றும் அரிமா சங்கத்தை ஒன்றிணைந்து நடத்திய அகவொளி திருமண விழா 324ஜே மாவட்ட கவர்னர் ஏ.டி.ரவிச்சந்திரன் தலைமையில் தலைவர் லையன் பி.கிறிஸ்டி தேவகுமாரி ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக திருமண விழா நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களின் ஆணைக்கிணங்க பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் 4வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ்,



5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு மாங்கல்யம் எடுத்து கொடுத்து மணமக்களை வாழ்த்தினார் இந்நிகழ்ச்சியில் 52வது வார்டு மாமன்ற உறுப்பினர் எல்.பெரியநாயகம் முதலாம் துணை ஆளுநர் லயன் பி.மணிசேகர், இரண்டாம் துணை ஆளுநர் லயன் ஆர்.நரசிம்மன், இரண்டாம் துணை ஆளுநர் லயன் பி.ஜெயக்கொடி, மண்டல தலைவர் ஆர்4 லயன் எஸ்.தனசேகரன், வட்டார தலைவர் இஸட்1 லைன் டி.பரணிதரன், செயலாளர் லயன் இ.அமுதா, பொருளாளர் லயன் வி.லாவண்யா அரிமா சங்க நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

## வேலூரில், தமிழ்நாடு அரசு நியாய விலைக்கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்!!




வேலூர்,ஏப்.26

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், தமிழ்நாடு அரசு நியாய விலைக் கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் 30 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, மாவட்டத் தலைவர் தலைமையிலும், மாவட்ட செயலாளர் ரமேஷ்பாபு முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாநிலச் செயலாளர் செல்வம் கலந்துகொண்டு கண்டன பேருரையாற்றினார். உடன் மாவட்ட பொருளாளர் ரமேஷ்குமார் மற்றும் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேனரை பிடித்து, தமிழ்நாடு அரசு கவனத்திற்கு கொண்டு செல்லும் விதத்தில் 30 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, சுமார் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பல்லாவரத்தில் தார்சாலை அமைக்கும் பணிகள் மற்றும் பூங்கா புதுப்பிக்கும் பணியையும் தொடங்கி வைத்த மண்டல தலைவர்

பல்லாவரம்,ஏப்.26

பல்லாவரத்தில் தார்சாலை அமைக்கும் பணிகள் மற்றும் பூங்கா புதுப்பிக்கும் பணியையும் தொடங்கி வைத்த மண்டல தலைவர் தொடங்கி வைத்தார்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 2வது மண்டலம் எண்கள் 20வது, 21வது வார்டு ஆகிய வட்டங்களில் உள்ள சுப்பிரமணியம் நகர், ஏஜிஎஸ் நகர் ஆகிய பகுதிகளில் 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை கலந்து கொண்டு புதிய தார்சாலை அமைக்கும் பணிகளுக்கும் பூங்கா புதுப்பிக்கும் பணியையும் தொடங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், மாமன்ற உறுப்பினர்கள் செ.முத்துக்குமார், கலைச்செல்வி வெங்கடேசன் வட்டக் கழக செயலாளர்கள் எம்.முருகையன், பி.வெங்கடேசன் மற்றும் குடியிருப்போர் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..






தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகரில் அருள்மிகு சிவகாமியம்மன் உடனுறை பூலாநந்தீஸ்வரர் திருகோவில் சித்திரை திருவிழா நடைபெற இருக்கிறது.திருவிழாவின் முக்கியநிகழ்வாக திருதேரோட்டம் நடைபெறும். திருத்தேர் வலம் வர நான்கு ரத வீதி யின் சாலைகள் போட நகராட்சி நிர்வாகத்தில் இருந்து பணி செய்ய ஆணை அளித்தும், இதுவரை பணிகள் நடைபெறவில்லை.இது சம்பந்தமாக நகராட்சி ஆணையாளரை இந்துமுன்னணி கோட்ட,மாவட்ட, நகர பொறுப்பாளர்கள் சந்தித்து திருத்தேரோட்டம் நடைபெறுவதற்கு முன்பாக பணிகள் செய்து முடிக்குமாறு மனு அளிக்கப்பட்டது.

# சிவகங்கை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், 10 பயனாளிகளுக்கு ரூ.07.27 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சியர்



சிவகங்கை,ஏப்.26

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு, நடைபெற்று வரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும் கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும்,

கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், ஆழ்துளை கிணறுகள் அமைத்திடவும், கண்மாய்க்கு செல்லும் வரத்துக்கால்வாய்களை சீரமைத்திடவும், விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், கண்மாய் ஆக்கிரமிப்புக்களை அகற்றிடவும், ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், தார் சாலை வசதி அமைத்திடவும், விவசாய பணிகளுக்கென இயந்திரங்கள் வழங்கிடவும், இலவச மின் இணைப்புகள் வழங்கிடவும், விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், அரசு மானியத்தில் சோலார் பம்ப்செட் அமைத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும் துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், கடனுதவிக்குரிய மானியத்தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் என்.என்.571 ஒக்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 09 விவசாயிகளுக்கு ரூ.7,27,660/ மதிப்பீட்டிலான பயிர் கடனுதவிகள் மற்றும் காரைக்குடி சரகம், திருப்பாக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலைக்கடையில் விற்பனையாளராக பணிபுரிந்த நபர் பணியிடையே மரணமடைந்ததையொட்டி, இறந்த நபரின் மனைவிக்கு அனுமந்தக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் அலுவலக உதவியாளராக கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை ஆகியவைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை முன்னிட்டு, துறை ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல் விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனலெட்சமி உட்பட வேளாண்மைத்துறை மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகர காவல் ஆணையர் தலைமையில் 500 காவலர்களுக்கு தலைக்கவசம் வழங்கல்



மதுரை: ஏப்.26

மதுரை மாவட்ட மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் ஊர்க்காவல் படையினர் போக்குவரத்து காவல்துறையினர் உட்பட 500 காவலர்களுக்கு தலைக்கவசம் வழங்கப்பட்டது.எலிக்ஸிர் பவுண்டேஷன் மற்றும் டுஹோம் பைனான்ஸ் சார்பில் தமிழகம் முழுவதும் ஐஎஸ்ஐ முத்திரை பதித்த 12,000 ஹெல்மெட்டுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி மதுரையில் 3000 ஹெல்மெட் வழங்கப்படுகிறது இதன் முதல் நிகழ்வாக 500 ஹெல்மெட் காவலர்களுக்கு இன்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மதுரை மாநகர காவல் துணை ஆணையர் போக்குவரத்து வனிதா, மதுரை மாநகர கூடுதல் காவல்துறை ஆணையர் போக்குவரத்து திருமலை குமார், உதவி ஆணையர்கள் இளமாறன், செல்வின்,போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் ரமேஷ் குமார் நந்தகுமார் சோபனா பஞ்சவர்ணம் பூர்ணகிருஷ்ணன் சுரேஷ் தங்கப்பாண்டி மற்றும் சார்பு ஆய்வாளர்கள் காவலர்கள் ஆகியோர் தலைமையில் ட்ரூம் பைனான்ஸ் சார்பில் ஸ்டேட் ஹெட் ராகவன், எலிக்சர் பவுண்டேஷன் சார்பில் கார்த்திக், முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் பகல்காம் தாக்குதலில் இறந்தவர்களுக்கு மலர்தூவி அஞ்சலி




குரோம்பேட்டை,ஏப்.26

குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் காஷ்மீர் பகல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் 26 பேரை பயங்கரவாதிகளால் சுட்டு கொன்றதை கண்டித்தும், இறந்தவர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் செலுத்தினர்.

சென்னை அடுத்த குரோம்பேட்டை நாகப்பா நகர் பகுதியில் இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் தேசிய தலைவர் ரமேஷ்பாபுஜி தலைமையில் காஷ்மீர் பகல்காம் சுற்றுலா பகுதிக்கு சென்ற சுற்றுலா பயணிகள் 26 பேரை கண்மூடித்தனமாக, கொடூரமான முறையில் சுட்டுகொன்றதை கண்டித்தும், இறந்தவர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செய்து வீரவணக்கம் செலுத்தினர். இது குறித்து தேசிய தலைவர் ரமேஷ்பாபுஜி பேசுகையில் காஷ்மீரில் தொடர்ந்து அப்பாவி பொதுமக்கள் பயங்கரவாதிகளால் சுட்டு கொல்லப்பட்டு வருகின்றனர். இவர்கள் மீது இந்திய அரசாங்கம் தயவு தாட்சனை பாராமல் போர்தொடுக்க வேண்டும் எனவும் காஷ்மீர் மாநிலம் இறந்தவர்களுக்கு 10 லட்ச ரூபாய் நிவாரண நிதியாக அறிவித்துள்ளதை தளர்த்தில் இறந்த ஒவ்வொருவருக்கும் 1 கோடி ரூபாய் தருமாறு கோரிக்கை வடுத்துள்ளார். இந்நிகழ்ச்சியில் இந்து திராவிட மக்கள் கட்சியின் நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்துகொண்டு மலர்தூவி அஞ்சலி செய்து வீரவணக்கம் செலுத்தினர்.

# சீர்மரபினர் வகுப்பை சார்ந்த பொதுமக்கள் பயன்பெறுகின்ற வகையில், சீர்மரபினர் நல வாரியத்தின் கீழ் பல்வேறு சேவைகளுக்கான சிறப்பு முகாம்கள்

சிவகங்கை,ஏப்.26

சிவகங்கை மாவட்டத்தில் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு, விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் உதவித்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, மூக்கு கண்ணாடி செலவுத் தொகை ஈடு செய்தல், முதியோர் ஒய்வூதியம் ஆகிய நலத்திட்ட உதவிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு, நலத்திட்ட உதவிகள் பெற சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களாகவும், 18 வயது முதல் 60 வயதுக்கு மிகாமல் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி, அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியாத குடும்பத்தில் ஒருவர் போன்ற தகுதிகளுடைய நபர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெறலாம்.

மேலும், ஏற்கனவே உறுப்பினராகப் பதிவு செய்தோர்கள் தங்கள் உறுப்பினர் பதிவினை புதுப்பித்து கொள்ளவும், புதுப்பித்தல் தவறிய உறுப்பினர்களை மீள வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ளவும், புதிய உறுப்பினர்கள் சேர்கையினை அதிகப்படுத்துதல், நலத்திட்ட உதவிகள் கோரும் மனுக்களை பெறுதல் ஆகியவை தொடர்பாக இளையான்குடி வட்டத்திற்கு வருகின்ற 29.04.2025 அன்று குமாரக்குறிச்சி, பெரும்பச்சேரி, கீழாய்குடி, கண்ணன் தேவன் புலி, நகரக்குடி, திருவுடையார்புரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளுக்கென குமாரக்குறிச்சி சமுதாயக்கூடத்திலும், 30.04.2025 அன்று மேலத் துறையூர், கண்ணமங்கலம், உத்தமனூர், நாகுமுகுந்தன்



குடி, திருவள்ளூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளுக்கென தாயமங்கலம் சமுதாயக் கூடத்திலும், மானாமதுரை வட்டத்திற்கு வருகின்ற 29.04.2025 மற்றும் 30.04.2025 ஆகிய தேதிகளில் சங்கமங்கலம், கீழப்பசலை, கிளாங்காட்டூர், மிளகனூர், மானாமதுரை டவுன் ஆகிய பகுதிகளுக்கென மானாமதுரை சீனியப்பா மஹாலிலும், சிங்கம்புணரி வட்டத்திற்கு வருகின்ற 05.05.2025 அன்று வலசைப்பட்டி, கரிசல்பட்டி, புழுதிப்பட்டி, பிரான்பட்டி, முசுண்டப்பட்டி, திருமலைக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளுக்கென புழுதிப்பட்டி சமுதாயக் கூடத்திலும், 06.05.2025 அன்று உலகம்பட்டி, கிழவயல், சடையன்பட்டி, குரும்பளூர், வாராப்பூர், மேலக் கண்ணாரிருப்பு, மிண்ண மலைப்பட்டி, கட்டுகுடிபட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கென புதூர் சமுதாயக்கூடத்திலும், 07.05.2025 அன்று சடையன்பட்டி, வேட்டையன்பட்டி, அரநத்தம்குண்டு, முறையூர், கோவில்பட்டி, எஸ்.எஸ்.கோட்டை, சூரக்குடி, கண்ணமங்கலப்பட்டி, நாட்டார் மங்கலம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளுக்கென சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெறும் முகாம்களில் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்த பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# காரைக்குடி செக்காலை சகாய மாதா ஆலயத்தில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் அவர்களுக்கு மௌன அஞ்சலி ஊர்வலம்




காரைக்குடி,ஏப்.26

காரைக்குடி செக்காலை சகாய மாதா ஆலயத்தில் பங்குத்தந்தை அருள் முனைவர் சார்லஸ் மற்றும் உதவி பங்குத்தந்தை டேனியல் திலீபன் மௌன அஞ்சலி ஊர்வலத்தை தலைமை ஏற்று துவக்கி வைத்தனர். மறைந்த திருத்தந்தை போப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்களின் திருவுருவப்படத்தை கையில் ஏந்தி பவனியானது ஆலய வளாகத்தில் இருந்து புறப்பட்டு ஜி. ஜி நகர்,100 அடி ரோடு, பெரியார் சிலை, செக்காலை ரோடு மற்றும் கல்லூரி சாலை வழியாக ஆலயத்திற்கு வந்தது.

பவனியில் ஏராளமான கிறிஸ்தவ மக்கள், கார்மேல் சபை அருட் சகோதரிகள், பங்கு பேரவையினர், அனைத்து பங்கு பணிக்குழுக்களும் சேர்ந்து மௌனமாக பவனியை வழிநடத்தினர். காவல்துறை அனுமதியுடன் போக்குவரத்துக்கு இடையூறின்றி பவனி ஆலயத்துக்கு வந்ததும் திருப்பலி நடைபெற்றது.

# காற்று மாசுபடுவதைத் தடுக்க மரக்கன்றுகள் வைத்துப் பராமரியுங்கள் உயர்நீதிமன்ற நீதிபதி இளந்திரையன் அறிவுறுத்தல்




தேவகோட்டை,ஏப்.26

சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் தலைவர்/ முதன்மை மாவட்ட நீதிபதி அறிவுறுத்தலின் சிவகங்கை மாவட்ட ஆணைக்குழுவின் செயலாளர்/சார்பு நீதிபதி ராதிகா வழிகாட்டுதலின்படி மரம் நடுவிழா நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தேவகோட்டை வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் சார்புநீதிமன்ற வளாகத்தில் Mega Tree Plantation மாபெரும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி சார்புநீதிபதி பா.கலைநிலா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் செயலாளர்/சார்பு நீதிபதி ராதிகா. நீதித்துறை நடுவர் மாரிமுத்து, மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதி செல்வி.பிரேமி ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நட்டனர். மேலும், இந்நிகழ்ச்சியில் தேவகோட்டை வழக்கறிஞர்கள் சங்க தலைவர். செயலாளர். பொருளாளர் மற்றும் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் எழுத்தர்கள். நீதிமன்ற அலுவலர்கள். காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர். அனைவரும் தனி கவனம் செலுத்தி மரக்கன்றுகளைப் பாதுகாத்து வளர்க்க முன்வர வேண்டுமென தேவகோட்டை சார்புநீதிபதி .பா.கலைநிலா தெரிவித்தார்.

## ஒட்டன்சத்திரம் கள்ளிமந்தயம் ஊராட்சியில் கலைஞர் கனவு இல்லத் திட்டம் அடிக்கல் நாட்டு விழா



ஒட்டன்சத்திரம், ஏப்.26

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கள்ளிமந்தயம் ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு கள்ளிமந்தையத்திலிருந்து கீரனூர் செல்லும் சாலையில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணியின் தீவிர முயற்சியால் கீரனூர் நால்ரோடு அருகே சுமார் 11 ஏக்கர் நில பரப்பளவில் சுமார் 200 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் கீழ் வீடுகள் கட்டுவதற்கு பழனி கோட்டாட்சியர், கண்ணன் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார். மேலும் இந்நிகழ்ச்சியில் தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபு பாண்டியன், வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் ராஜாமணி விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள் சத்திய புவனா, அய்யம்மாள், ஒன்றிய குழு துணைத் தலைவர் பி.சி.தங்கம் இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கள்ளிமந்தயத்தில் கட்டப்பட வுள்ள கலைஞர் கனவு இல்ல நகரில் பயனாளிகளுக்கு தேவையான, தார் சாலை, காவிரி கூட்டு குடிநீர் வசதி, மின்சார வசதி, கழிவுநீர் வாய்க்கால் வசதி, மற்றும் சுற்றுச்சுவர், சமுதாயக்கூடம், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மயமான கலைஞர் கனவு இல்ல வீடுகள் கட்டப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியின் நிறைவில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கணேசன் நன்றியுரையாற்றினார் இதில் அரசு அதிகாரிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,பயனாளிகள்,ஊர் பொதுமக்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## கரூரில் குற்ற வழக்குகளில் விரைந்து செயல்பட்ட காவல் துறையினருக்கு எஸ்பி பாராட்டு




கரூர், ஏப்.26

கரூர் மாவட் டத்தில் குற்ற வழக்குகளில் விரைந்து செயல் பட்ட காவல் ஆய்வாளர்கள், உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

கரூர் மாவட்ட காவல் கண் காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் மாதாந்திர குற்ற கலந்தாய்வுக் கூட்டம் நடை பெற்றது. மாவட்ட எஸ்பி பெரோஸ்கான்

அப்துல்லா தலைமை வகித்தார். கூட்டத்தில், ஏடிஎஸ் பிக்கள், டிஎஸ்பிக்கள், இன்ஸ் பெக்டர்கள் உட்பட அனைத்து போலீசார் கலந்து கொண்டனர். இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில், கொலை வழக்குகள், வழிப்பறி குற்றவாளிகள், இரவு மற்றும் பகல் கன்ன களவு குற்றவாளிகள், போக்கிரிகள் மற்றும் திட்டமிட்டு செயல்படும் குற்றவாளிகள் ஆகியோர்களை தொடர்ந்து கண்காணித்து முறையான நடவ டிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து, கரூர் மாவட்ட காவல் துறையில் குற்ற வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைந்து கைது செய்து சிறப்பாக பணியாற்றிய இன்ஸ் பெக்டர்கள், எஸ் ஐ க்கள் மற்றும் போலீசார்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டி பேசினார்.



தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணையத்தின் செயல் திட்டத்தின் படியும் சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படியும் இளையான்குடியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இளையான்குடி வட்ட சட்டப்பணிகள் குழுத் தலைவரும் நீதிபதியுமான ஹரி ராமகிருஷ்ணன் மரக்கன்றுகளை நட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.உடன் வழக்கறிஞர்கள் அண்ணாதுரை, சத்தியேந்திரன், ரவி, வேல்முருகன், குமார், மகாதீர், சுகன்யா, ஹரி மற்றும் அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி , பசுமை சமூக ஆர்வலர் வலர் மாலிக், நீதிமன்ற ஊழியர்கள் கலந்து கொண்டனர். நெடுஞ்சாலையின் இரு ஓரங்களிலும் மரக்கன்றுகளை நட திட்டமிடப்பட்டுள்ளது நிகழ்ச்சி ஏற்பாடுகளை சட்டப்பணிகள் குழு இளவரசு தலைமையில் செய்திருந்தனர்..



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா செள சங்கீதா காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் தீவிரவாத தாக்குதல் அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்று விமானம் மூலம் மதுரை விமான நிலையத்திற்கு வருகை தந்த பாலசந்துரு ,மனைவி .கஸ்தூரி ஆகியோரை மதுரை விமான நிலையத்தில் வரவேற்றார் திருமங்கலம் வருவாய் கோட்டச்சியர் சிவஜோதி உடன் உள்ளார்



திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டாச்சியர் அலுவலகத்தில் அனைத்துதுறை மாவட்ட அளவிலான அலுவலர்களின் கள ஆய்வு கருத்துக்கள் மீது ஆய்வுகூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது.

## தென்னை விவசாயிகளுக்கு வேளாண் மாணவர்கள் பயிற்சி முகாம்



வாடிப்பட்டி, ஏப்.26

சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை, காரைக்குடியில் நான்காம் ஆண்டு பயிலும் அரவிந்த்.ஏ, கிரிதரன்.எஸ், மணீஷ் ,திருப்பதி , முகமத் நூரல் அமீன்.கே, ராம்பிரசாத் கே.எஸ்., மற்றும் சுரேஷ்.என் மாணவர்கள் வாடிபட்டி அருகே கட்டக்குளம் கிராமத்தில் தேங்காய் உடலியல் கோளாறு குறித்து விவசாயிகளுக்கு கூட்டம் நடத்தினர்.

வேளாண் கல்லூரி மாணவர்கள் தேங்காய் உடலியல் கோளாறு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தேங்காய் உடலியல் கோளாறு காரணமாக விவசாயிகள் பெரும் இழப்புகளை சந்திக்கின்றனர். இந்த கோளாற்றை தடுக்க விவசாயிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாணவர்களிடம் விவரித்தனர்.



திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம் வேலப்பநாயக்கன் வலசு ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புதுறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை ஊர் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

## காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த நபர்களுக்கு அஞ்சலி செலுத்திய பாஜக வினர்



தேனி, ஏப்.26

தேனி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாவட்ட தலைவர் ராஜபாண்டியன் தலைமையில் காஷ்மீர் பஹல்காம் பள்ளத்தாக்கில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த26 நபர்களது ஆன்மா சாந்தி அடையவும்,மோட்ச தீபமேற்றி மௌன அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் பாகிஸ்தான் நாட்டை கண்டித்து அந்நாட்டின் கொடியை கிழித்தும், தீயிட்டு கொழுத்தியும் தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர். மேலும் இந்திய ராணுவ ஆட்சியை ஆதரித்தும், தீவிரவாதத்திற்கு எதிராக உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்வில் மத்திய அரசு வழக்கறிஞர் சன்னாசிபாபு ,ஒன்றிய தலைவர்கள் கிழக்கு முத்தையா, வடக்கு முருகன், முன்னாள் நகரதலைவர் முத்துப்பாண்டி, பாராளுமன்ற தொகுதி முழு நேர ஊழியர் முருகன், மாவட்ட நிர்வாகிகள், கோபி கண்ணன், முனியாண்டி, உட்பட பாரதிய ஜனதா கட்சியின் மாநில, மாவட்ட ,நகர,ஒன்றிய, நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராமத்தில் ரூ.14.77 கோடி மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான விளையாட்டரங்கம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்

## மலேரியா தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி



முதுகுளத்தூர் ஏப்,26

முதுகுளத்தூர் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் உலக மலேரியா தினம் விழா கொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட மலேரியா அலுவலர் ரமேஷ் தலைமை வாங்கினார். அரசினர் தொழிற் பயிற்சி கூடத்தின் முதல்வர் குப்புசாமி முன்னிலை வகித்தார். இதில் மாணவர்களுக்கு மலேரியா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது இதனைத் தொடர்ந்து உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் இளநிலை பூச்சியில் வல்லுநர் பாலசுப்ரமணியன் தொழில் பயிற்சி நிலைய ஆசிரியர்கள் குருநாதன் சேது பாஸ்கர், வட்டார சுகாதார மேற் பார்வையாளர் சுப்பிரமணியன் சுகாதார ஆய்வாளர்கள் நேதாஜி சக்தி மோகன் சபரி முருகன் கருணாகர சேதுபதி சதாம் உசேன் ஜெயச்சந்திரன் உட்பட மாணவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## உசிலம்பட்டியில் வேளாண் கல்லூரி மாணவர்கள் நடத்திய வேளாண் கண்காட்சி



தேனி, ஏப்.26

தேனி மாவட்டம் குள்ளபுரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரியில் விவசாயம் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் அஜய், அதிஷ், பாலாஜி, தேவ் நாத், தனுஷ், ஹரி பாலாஜி, ஜாக், மதுகரோன், முகமத் பயாஸ்,ரூபன் டெனி மற்றும் சிவா பிரகாஷ் ஆகியோர் கிராம தங்கள் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி வட்டாரத்தில் களப்பணியாற்றி வருகின்றனர். இவர்கள் இன்று ( 24.4.25) உசிலம்பட்டி வேளாண்மை அலுவலகத்தில் வேளாண்மை கண்காட்சி நடத்தினர். பொறுப்பு ஆசிரியர் இளங்கோவன் மற்றும் சதுரகிரி ஆலோசனையயின் பேரில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியில் உயிரி பூச்சிகொல்லிகள், இயற்கை விவசாயம்,பட்டு பூச்சி வளர்ப்பு, காளான் வளர்ப்பு, உயிரி வாயு மாதிரி, மதிப்பு கூட்டு பொருட்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு, பசுமை குடில்,ஒருங்கினந்த விவசாயம், காற்றுயியங்கி பறவை விரட்டி மற்றும் தேனி வளர்ப்பு பற்றி மாணவர்கள் கண்காட்சி வைத்திருந்தினர். கண்காட்சியில் தா. மேரி. ஜரின் ஆகினிட்டா டி. எஸ். ஸி( விவசாயம் )வேளாண் துணை இயக்குனர் கலந்து கொண்டு சிறப்பித் தார் மற்றும் ஏராளமான விவசாயில்கள் கண்காட்சியில் கலந்துகொண்டு பயன்யடைந்தனர்.

## மதுரை மாநகர சாலைகளில் வாகன போக்குவரத்திற்காக ஒரு நாள் ஒரு சாலை என்ற திட்டம் அறிமுகம்



மதுரை: ஏப்ரல் 26

சித்திரை பெருவிழா மற்றும் ஸ்ரீகள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளல் விழா போன்ற

நிகழ்ச்சிகள் வெகு விமர்சையாக நடைபெற உள்ளதால், அதன் காரணமாக மதுரைமற்றும் மதுரையை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் மற்றும்பொதுமக்கள் தரிசனம் செய்ய நகருக்குள் வரக்கூடும் என்பதால் அவர்கள் எளிதாக

சிரமமின்றி தரிசனம் செய்து செல்வதற்கும். சீரான வாகன போக்குவரத்து ஏற்படுத்தும்

பொருட்டும் மதுரை மாநகரில் உள்ள கீழ்கண்ட சாலைகளான 1.நேதாஜி ரோடு (KPS ரவுண்டானா முதல் முருகன் கோவில் வரை),

2.TPKரோடு (KPS ரவுண்டானா முதல்ஜம்ஜம் கடை வரை)

3.டவுன்ஹால் ரோடு,

4.தெற்குமாசி வீதி, (விளக்குத்தூண் முதல்மறவர் சாவடி வரை)

5.தெற்குமாசி வீதி (மறவர் சாவடி முதல் ஜிவி கோர்ட் வரை),

6.மேலமாசி வீதி,

7.தெற்காவணி மூல வீதி.
8.கீழமாசி வீதி (லெமன் மார்கெட் சந்திப்பு முதல் அம்மன் சன்னதி வரை),

9.கீழமாசி வீதி (அம்மன் சன்னதி முதல்விளக்குத்தூண் சந்திப்பு வரை),

10.மேல ஆவணி மூல வீதி. 11.வடக்கு மாரட் வீதி (மே பிளவர் சந்திப்பு முதல் மேலமாசி வடக்கு மாசி வீதி சந்திப்பு).

12.வடக்குமாரட் வீதி (மேலமாசி வடக்கு மாசி வீதி சந்திப்பு முதல் தளவாய் தெரு சந்திப்பு)ஆகிய 12 சாலைகளில் ஒரு நாள் ஒரு சாலை என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. மேற்படி திட்டப்படி அச்சாலையில் நடைபாதை மற்றும் சாலையோரஆக்கிரமிப்புகள் முற்றிலும் அகற்றி, வாகனங்கள் தடையின்றி இலகுவாக செல்லவும். பொதுமக்கள் மற்றும் பாதசாரிகள் சிரமமின்றி, அச்சமின்றி சாலைகளை கடக்கவும்வழி ஏற்படுத்தியும், ஒரு நாள் ஒரு சாலை என்ற திட்டம் செயல்படுத்தப்படும்சாலைகளில் உள்ள வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள் அவர்களது வணிக பொருட்களை நடைபாதையில் அல்லது சாலையோரங்களில் குவித்து வைத்துபோக்குவரத்திற்கும். பொதுமக்களுக்கும் இடையூறு செய்யாமலும், மேற்படி வணிக

நிறுவன கடைகளின் தற்காலிக கட்டுமானத்தை நடைபாதைகளில் நீட்டிப்பு செய்திருந்தால் அதனை அகற்றியும் தங்களது வாகனங் களைபோக்குவரத்து இடையூறு ஏற்படும் வகையில் சாலைகளில் நிறுத்தாமலும் காவல்துறைக்குஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161